செய்தி வெளியீடு: நாள்:21.11.2018

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாண்புமிகு ஆளுநர் பார்வையிட்டார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் கஜா புயலினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்று (21.11.2018) மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் பார்வையிட்டு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சென்று ஆறுதல் கூறினார். உடன் மாண்புமிகு. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஓ.எஸ்.மணியன் அவர்களும், ஆளுநரின் கூடுதல் தலைமை செயலர் திரு. ஆர்.ராஜகோபால் இ.ஆ.ப., அவர்களும், நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு.சீ.சுரேஷ்குமார், இ.ஆ.ப., அவர்கள் உடன் இருந்தனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம், வேளாங்கண்ணி, பூவைத்தேடி, காமேஸ்வரம், விழுந்தமாவடி, புதுப்பள்ளி, வேட்டைக்காரனிருப்பு, தாதன்திருவாசல், கோவில்பத்து, வானவன்மகாதேவி, கள்ளிமேடு, தாமரைப்புலம், செம்போடை வடக்கு, தேத்தாக்குடி தெற்கு ஆகிய பகுதிகளில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட வீடுகள், மரங்கள், மின்கம்பங்கள், மின்மாற்றிகள் ஆகியவற்றை பார்வையிட்டார்.

தொடர்ந்து தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட வெள்ளப்பள்ளம் கிராமத்தில் பாதிக்கப்பட்ட வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டார். பழங்கள்ளிமேடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களிடம் பாதிப்புகள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து, தோப்புத்துறை, வள்ளியம்மை சாலை, மகாராஜபுரம் (வேதாரண்யம்) காசி விஸ்வநாதர் ஆலயம், வேதாரண்யம் நகரத்தில் மேலவீதி புனித மாதா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பெரிய குத்தகை, புஷ்பவனம், அரசினர் மேல்நிலைப் பள்ளி, கஞ்சமேனித்தெரு அரசு உதவிபெறும் நடுநிலைப்பள்ளி, நாலுவேதபதி ஊராட்சி, தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியத்தில் கிராம ஊராட்சி சேவை மையம், டி.டி.கே புயல் பாதுகாப்பு இல்லம், கீழையூர் ஒன்றியம் தாதன் திருவாசல் ஆகிய கிராமங்களில் மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் பார்வையிட்டு, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறினார்.

தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், வெள்ளப்பள்ளம் கிராமத்தில் பொதுமக்களை நேரடியாக சென்று சந்தித்து, அவர்களிடம் புயலால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து கேட்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். தொடர்ந்து நாலுவேதபதி மற்றும் மகாராஜபுரம் கிராமங்களில் புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை பார்வையிட்டார்.

பின்னர் வேதாரண்யம் புனித அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் உள்ள முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு, குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பார்வையிட்டார்.

புஷ்பவனம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமினை பார்வையிட்டு, பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், தொற்று நோய் பரவாமலிருக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கை குறித்தும் கேட்டறிந்தார். மேலும் அப்பகுதியில் புயலின் காரணமாக சாய்ந்துள்ள தென்னை மரங்களைப் பார்வையிட்டு, இழப்புகள் குறித்து விவசாயிகளிடம் கேட்டறிந்தார்.

கீழையூர் ஊராட்சி ஒன்றியம் தாதன்திருவாசல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவ முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு பயன்படுத்தும் வகையில் தார்பாலின்களை மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் வழங்கினார்.

வேதாரண்யம் நகராட்சிப் பகுதியில் மக்களுக்கு வீட்டு உபயோக எரிவாயு வழங்குமிடத்தில் கூட்ட நெரிசல் காரணமாக எரிவாயு பெறுவது தாமதமாகிறது என பொதுமக்கள் மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் தெரிவித்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கும் படி மாவட்ட ஆட்சியரிடம் உத்தரவிட்டதற்கிணங்க, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கூடுதலாக வீட்டு உபயோக எரிவாயு உருளை வழங்குவதற்காக தற்காலிகமாக விநியோக மையம் அமைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களை தலைவராகக் கொண்ட செஞ்சிலுவைச் சங்கம் சார்பாக “கஜா” புயலால் பாதிக்கப்பட்ட சுமார் 4500 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக, 10 வாகனங்களில் வரப்பெற்ற ரூ. 1 கோடி மதிப்பீட்டிலான தார்பாலின், பருப்பு, அரசி, போர்வை, துண்டு, ஆயில், வாட்டர் பாட்டில்கள் ஆகிய நிவாரண பொருட்களை மாவட்ட நிர்வாகத்திடம் மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் ஒப்படைத்தார். இந்த நிவாரணப் பொருட்கள் தமிழ்நாடு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு.ஹர்ஷத்மேத்தா அவர்களின் ஒருங்கிணைப்பில் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் நாகப்பட்டினம் சார் ஆட்சியர் அலுவலகத்தில புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவளிப்பதற்காக சுமார் 10000 நபர்களுக்கு உணவு சமைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடத்தினை(**Mass Kitchen**) பார்வையிட்டு, உணவை சாப்பிட்டுப் பார்த்து, இதே போன்று தரம் குறைவில்லாமல் பொதுமக்களுக்கு உணவினை வழங்கிட வேண்டுமென அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்த சமையல் கூடங்கள் தலைஞாயிறு மழை மாரியம்மன் கோவில், பெரியகுத்தகை பல்நோக்கு பேரிடர் மையம் ஆகிய இடங்களிலும் செயல்பட்டு வருகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்(மக்கள் தொடர்பு), ராஜ்பவன், சென்னை